மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை
இ.ம.எண்.01/2022
அ.வ.எண்.17/2022

1. பெருமாயி
2. சுப்பிரமணி
3. பழனிசாமி
4. சேட்டு ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சித்தையன்
2. மாதேஸ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 22.02.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.கோகிலவாணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்தை 1ம் மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து கடந்த 20.02.2006ம் தேதி பத்திர எண்.474/2006ன் கீழ் ச.எண்.307/16C மற்றும் ச.எண்.307/16Bல் 19 1/2 செண்ட் நிலத்தை ரூ.11,700/–க்கு கிரயமும், சுவாதீனமும் பெற்று அனுபவித்து வந்தார். மனு சொத்து மொத்தம் 19 1/2 செண்ட் நிலமாகும்.

(ii) மனுசொத்தை 1ம் மனுதாரர் அவரது மக்களான 2 முதல் 4 வரையிலான மனுதாரர்களுக்கு வாய்மொழி பாகமாக பிரித்து அவர்களுக்கு சுவாதீனமும் கொடுத்து விட்டார். 1ம் மனுதாரர் அவரது கடைசி மகனான 4ம் மனுதாரருடன் தாவா சொத்திலுள்ள 4ம் மனுதாரரின் பெயரிலுள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார். 2, 3ம் மனுதாரர்கள் தொழில் விசயமாக வெளியூர் சென்று பணிபுரிந்து அருகிலுள்ள ஊரில் குடியிருந்து வருகின்றனர்.

(iii) 1ம் மனுதாரருடைய மனு சொத்தும், எதிர்மனுதாரர்களுடைய சொத்தும் கூட்டு பட்டாவாக பட்டா எண்.1574ல் உள்ளது. இந்நிலையில் 1ம் மனுதாரர் தனிப்பட்டா வேண்டி மேட்டுர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 10.03.2021ம் தேதி மனு கொடுத்து தனிப்பட்டாவிற்கு விண்ணப்பித்துள்ளார். மனு சொத்தை அளவீடு செய்து அத்து காட்டி தனிப்பட்டா வழங்க கோரி மனு செய்த வகையில் கூட்டு பட்டாவில் உள்ள மனு சொத்தை அளக்க வருவாய்துறையினர் வருவதாக எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு கடந்த 03.12.2021ம் தேதியில் மனு சொத்தை அளவீடு செய்ய முற்படும்போது தங்களுக்கு 1செண்ட் நிலத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அளவீடு செய்யும்படியும், அடியாட்களுடன் மனுசொத்திற்குள் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்தனர்.

(iv) இந்நிலையில் 20.01.2022ம் தேதியில் மனுசொத்திற்குள் எதிர்மனுதாரர்கள், அவர்களது ஆட்களுடன் மீண்டும் வந்து இடையூறு செய்தனர். எனவே மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்து 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்தாகும். மேற்படி சொத்து சம்மந்தமாகவும், 20.02.2006ம் தேதியிட்ட கிரயப்

பத்திரம் சம்மந்தமாகவும் 2ம் எதிர்மனுதாரரின் சகோதரர் வேலு என்பவர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.49/2022 என்ற வழக்கு தொடர்ந்து அது நிலுவையில் உள்ளது. 1ம் மனுதாரரிடம் 2ம் எதிர்மனுதாரர் பெற்றிருந்த கடன் ரூ.10,000/–க்கு வேண்டி நிமித்த கிரயமாக மேற்படி கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்பது தான் உண்மை. மேலும் ச.எண்.307/6Bல் உள்ள கிணறு கூட்டு கிணறு. அதை ஏமாற்றி 1ம் எதிர்மனுதாரரிடமும் கிரயப்பத்திரம் பெற்றுள்ளார்கள். மேலும் மேற்படி பணம் வட்டியுடன் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தும்போது கிரயத்தை ரத்து செய்வதாக 1ம் மனுதாரர் உறுதி அளித்ததை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் தாவா சொத்தை கொண்டு 2ம் எதிர்மனுதாரரின் மற்ற நிலங்களில் மனுதாரர்கள் இடையூறு செய்து வருவது தான் உண்மை. மேலும் வருவாய்துறையினர் அளக்க வருவதாக அறிவிப்பு கொடுத்ததாக கூறுவது தவறானதாகும். எதிர்மனுதாரர்களுக்கு இதுகுறித்து எந்த தகவலும் இல்லை. மேலும் 28.11.2021ம் தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தால் விசாரணை நடந்திருக்கும். அதுபோன்ற நிகழ்வு ஏதும் இல்லை. மேலும் 03.12.2021ம் தேதியில் தாவா சொத்தில் 1 செண்ட் நிலம் கேட்டு எதிர்மனுதாரர்கள் அவர்களது ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து வாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்ததாக கூறுவதும், பணம் பெற்றுக் கொள்ள மறுத்து 1 செண்ட் நிலத்தை எதிர்மனுதாரர்கள் கிரயம் கேட்டதாக கூறுவதும், 20.01.2022ல் மீண்டும் எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்ததாக கூறுவதும் தவறானதாகும்.

(iii) தூய்மையான கரங்களுடன் மனுதாரர்கள் நீதிமன்றத்தை அணுகவில்லை. எதிர்மனுதாரர்களை இடையூறு செய்து சொத்தை அபகரிக்கும் நோக்கில் உண்மை சங்கதிகளை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் மனு சொத்தை எதிர்மனுதாரர்களிடமிருந்து கிரயம் பெற்றுள்ள நிலையில் மனு சொத்திற்கு தனிப்பட்டா வழங்க வேண்டி வருவாய் துறையினர் எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு கடந்த 03.12.2021 ம் தேதியில் மனு சொத்தை அளவீடு செய்ய முற்படும்போது எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு 1 செண்ட் நிலத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அளவீடு செய்யும்படி தகராறு செய்ததோடு, கடந்த 20.01.2022 ம் தேதியில் மனுசொத்திற்குள் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்தனர் எனவும், எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் 03.12.2021 ம் தேதியில் தாவா சொத்தில் 1 செண்ட் நிலம் கேட்டு எதிர்மனுதாரர்கள் அவர்களது ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களின் சுவாதீனத்தை இடையூறு செய்ததாக கூறுவதும், பணம் பெற்றுக் கொள்ள மறுத்து 1 செண்ட் நிலத்தை எதிர்மனுதாரர்கள் கிரயம் கேட்டதாக கூறுவதும், 20.01.2022 ல் மீண்டும் எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்ததாக கூறுவதும் தவறானது என்றும், மனுதாரர்கள் மனு சொத்தை கொண்டு எதிர்மனுதாரர்களின் மற்ற சொத்துகளுக்கு இடையூறு செய்வதாகவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்வதாக கூறுவது பொய்யானது என்றும், அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள அதே உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார்கள். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய

அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.03.04 18:49:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2023.03.04 18:49:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.